# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்:317/மா/2025**

**நாள்: 15.04.2026**

P. S. சிவகுரு
சென்னை --- முறையீட்டு மனுதாரர்

ஆணையர்
ஓசூர் மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

சென்னை–17, தியாகராய நகர், அடன்டிரா டவர்ஸ், திருமலை ரோடு, கதவு எண் 25 என்கிற முகவரியில் இயங்கும் M/s Ourland Engineering Works Pvt. Ltd–ன் இயக்குநராக உள்ள திரு. P.S.சிவகுரு என்பவரின் 10.07.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.07.2025 அன்று பெறப்பட்டு 317/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சென்னை–17, தியாகராய நகர், அடன்டிரா டவர்ஸ், திருமலை ரோடு, கதவு எண் 25 என்கிற முகவரியில் இயங்கும் M/s Ourland Engineering Works Pvt. Ltd–ன் இயக்குநராக உள்ள திரு. P.S.சிவகுரு என்பவர் தனது 10.07.2025 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:–

"The Complainant is carrying out solid waste management operations in India.

The Complainant was awarded the tender for supplying manpower to Hosur Corporation (hereinafter referred to as the 'Respondent') for carrying out solid waste management work, drain cleaning, street sweeping and other allied activities.

Subject resolutions were being passed by the Respondent thereby approving amount to be provided to the Complainant for the purpose of supplying manpower. Copies of the subject resolutions issued in July 2022 and March 2023 are attached herewith as Annexure A.

Followed by the subject resolution, Work Orders were issued to the Complainant providing for the number of manpower to be supplied and the amount to be paid to each one of them, including the statutory deductions to be

remitted thereof. Reliance is placed on one such Work Order bearing No.ந.க. எண் 4517/2011/H1 dated 07.06.2023 which is attached as Annexure B.

The Work Orders were generally issued in batches for supplying 50 nos. 60 nos., 160 nos., 250 nos. manpower for the periods provided for in the said Orders. In furtherance of the Work order, the Complainant supplied manpower to the Respondent since then and their Work Order was renewed for several months.

The Respondent released funds periodically to the Complainant during the tenure of the Work Order. Subsequent to completion of the period in the Work Order, the Complainant sought for the release of their final payment. However, the Respondent failed to release the same for reasons not known to the latter. The Statement of Accounts reflecting the outstanding due being Rs.31,85,691/- (Rupees Thirty One Lakhs Eighty Five Thousand Six Hundred Ninety One Only) is attached Annexure C.

The Complainant submitted documentary evidence of full payment of salaries to the manpower (out of their own funds) including remittance of statutory deductions to all the deployed manpower. However, the Respondent has withheld the payment and is throwing unsubstantiated allegations that the Complainant has not remitted statutory payments to the deployed manpower.

Despite the Complainant's diligent efforts to follow up for the payment by submitting the relevant documentation, including issuance of letters requesting payment, the Complainant continues to face delays without any conclusive response from the Respondent.

It is disappointing that, despite the Complainant's timely submission of all relevant bills, no concrete action has been taken to release the payment due. This ongoing delay has caused undue financial strain on the Complainant's operations. The Complainant submits that they are ready to submit the entire documentary evidence as and when directed by this Hon'ble Authority.

Since the Complainant has also completed their work, the Earnest Money Deposit and the Security Deposit (paid at the time of commencement of work by Complainant) and any such deductions made by the Respondent during the course of work ought to be released to the Complainant along with the outstanding due.

Hence, the present complaint is <u>to release the pending payment to the Complainant which is as follows:</u>

| | |
|---|---|
| Outstanding Due for services rendered<br>+ | Rs.31,85,691/- |
| EMD<br>+ | To be confirmed with the records available with the Respondent |
| Security Deposit | To be confirmed with the records available with the Respondent |

Along with the accrued interest @12% p.a. from the due date till the date of payment to the Complainant.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 18.09.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் ஒசூர் மாநகராட்சி ஆணையாளரிடம் கோரப்பட்டது. எவ்வித அறிக்கையும் ஒசூர் மாநகராட்சி ஆணையாளரிடமிருந்து பெறப்படவில்லை.

3. எனினும், இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 25.03.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 27.02.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. இந்நிலையில், ஒசூர் மாநகராட்சி ஆணையாளர் தனது 17.03.2026 நாளிட்ட கடிதம் ந.க. எண் 4517/2011/எச்1–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்:

"ஒசூர் மாநகராட்சி அவர்லேண்ட் நிறுவனத்திடம் இருந்து பிடிக்கப்பட்ட தொகையினை விடுவிக்க கோரி கடிதம் அனுப்பி உள்ளனர். மேலும் அவர்லேண்ட் நிறுவனம் ஒப்பந்த முறையில் பணியாற்றிய தற்காலிக தூய்மை பணியாளர்களின் சம்பளத்தில் ESI மற்றும் EPF பிடித்தம் செய்த விவரங்களை சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டது. அவ்வாறு ஒவ்வொரு பணியாளர்களின் ESI மற்றும் EPF பிடித்தம் செய்யப்பட்ட தொகை பற்றிய விவரத்தினை அளிக்கும்பட்சத்தில் பிடித்தம் செய்யப்பட்ட தொகையில் 50% தொகையினை வழங்கப்படும் என்பதனை இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது."

5. மனுதாரர், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 25.03.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"Our Land Engineering Works Pvt.Ltd., என்கிற பெயரில் ஒசூர் மாநகராட்சிக்கு ஒப்பந்தப்பணி செய்த வகையில் எனக்கு வர வேண்டிய நிலுவைத் தொகையான ரூ.31,85,691/– குறித்து, பலமுறை ஒசூர் மாநகராட்சிக்கு தெரிவித்தும் இந்நாள் வரை எந்தவித நடவடிக்கை எடுக்கவில்லை. இதற்கு முன்னதாக 23.06.2023 அன்று சமர்ப்பித்த பட்டியலுடன் ஒப்பந்தப் பணியாளர்களிடம் ESI மற்றும் EPF பிடித்த விவரங்களை அளித்துள்ளேன். இருப்பினும், தற்போது மீண்டும் அவ்விவரங்களை கோரியுள்ளதால் ஒசூர் மாநகராட்சியிடம் விவரங்களை அளித்துள்ளேன். எனவே, அதன் அடிப்படையில் மேற்கண்ட நிலுவைத் தொகையினை ஒசூர் மாநகராட்சி மாநகர நல அலுவலர் இன்றைய (25.03.2026) விசாரணையில் தெரிவித்தவாறு ஒரு மாதத்திற்குள் வழங்குமாறு ஒசூர் மாநகராட்சிக்கு உத்திரவிடுமாறு இம்முறை மன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்."

6. எதிர்மனுதாரர் தரப்பில் ஒசூர் மாநகராட்சி மாநகர நல அலுவலர் 25.03.2026 அன்று தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:–

"ஒசூர் மாநகராட்சியில் மனுதாரரின் Our Land Engineering Works Pvt.Ltd –க்கு 25.03.2023 முதல் 23.04.2023 வரை செய்த ஒப்பந்தப் பணிக்கான தொகை ரூ.54,00,802/–. அதில் 27,00,401/– கடந்த ஜீன் மாதம் மனுதாரருக்கு வழங்கப்பட்டு விட்டது. ஒப்பந்தப் பணியாளர்கள் ஒசூர் மாநகராட்சி ஆணையரிடம் புகார் தெரிவித்ததின் அடிப்படையில் மீதமுள்ள தொகை பிடித்தம் செய்யப்பட்டது.

மனுதாரர் தற்போது சமர்ப்பித்துள்ள ESI மற்றும் EPF தொடர்பான விவரங்கள் ஒசூர் மாநகராட்சியில் உள்ள வருகை பதிவேட்டோடு சரிபார்க்கப்பட்டு அவருக்கு நிலுவைத் தொகை ஒரு மாதத்திற்குள் வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், மனுதாரருக்கு அளிக்கப்பட வேண்டிய EMD மற்றும் Security Deposit தொகையான ரூ.12,60,025/—ஐ வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும்."

7. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான ஒசூர் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் மாநகர நல அலுவலரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

Our Land Engineering Works Pvt.Ltd., என்கிற பெயரில் ஒசூர் மாநகராட்சிக்கு ஒப்பந்தப்பணி செய்த வகையில் தனக்கு வர வேண்டிய நிலுவைத் தொகையான ரூ.31,85,691/— குறித்து ஒசூர் மாநகராட்சிக்கு தெரிவித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதும், இதற்கு முன்னதாக ஒப்பந்தப் பணியாளர்களிடம் ESI மற்றும் EPF பிடித்த விவரங்களை மனுதாரரால் ஒசூர் மாநகராட்சிக்கு பட்டியலுடன் அளிக்கப்பட்டது என்பதும், இருப்பினும், தற்போது மீண்டும் அவ்விவரங்களை கோரியுள்ளதால் ஒசூர் மாநகராட்சியிடம் விவரங்களை மனுதாரரால் அளிக்கப்பட்டது என்பதும், அதன் அடிப்படையில் மேற்கண்ட நிலுவைத் தொகையினை ஒசூர் மாநகராட்சி மாநகர நல அலுவலர் 25.03.2026 விசாரணையில் தெரிவித்தவாறு ஒரு மாதத்திற்குள் வழங்குமாறு ஒசூர் மாநகராட்சிக்கு உத்திரவிடுமாறு கோரியிருப்பது மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

ஒசூர் மாநகராட்சியில் மனுதாரரின் Our Land Engineering Works Pvt.Ltd—க்கு 25.03.2023 முதல் 23.04.2023 வரை செய்த ஒப்பந்தப் பணிக்கான தொகை ரூ.54,00,802/— லிருந்து ரூ.27,00,401/— கடந்த ஜீன் மாதம் மனுதாரருக்கு வழங்கப்பட்டு விட்டது என்பதும், ஒப்பந்தப் பணியாளர்கள் ஒசூர் மாநகராட்சி ஆணையரிடம் புகார் தெரிவித்ததின் அடிப்படையில் மீதமுள்ள தொகை பிடித்தம் செய்யப்பட்டது என்பதும், மனுதாரர் சமர்ப்பித்துள்ள ESI மற்றும் EPF தொடர்பான விவரங்கள் ஒசூர் மாநகராட்சியில் உள்ள வருகை பதிவேட்டோடு சரிபார்க்கப்பட்டு அவருக்கு நிலுவைத் தொகை ஒரு மாதத்திற்குள் வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும், மனுதாரருக்கு அளிக்கப்பட வேண்டிய EMD மற்றும் Security Deposit தொகையான ரூ.12,60,025/—ஐ வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் ஒசூர் மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் மாநகர நல அலுவலரின் வாக்குமூலம் ஆகியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

இந்நேர்வில், ஒசூர் மாநகராட்சியில் மனுதாரரின் Our Land Engineering Works Pvt.Ltd—க்கு மாநகராட்சியால் பிடித்தம் செய்யப்பட்ட தொகையினை, மனுதாரர் சமர்ப்பித்துள்ள ESI மற்றும் EPF தொடர்பான விவரங்களை ஒசூர் மாநகராட்சியில் உள்ள வருகை பதிவேட்டோடு சரிபார்க்கப்பட்டு அவருக்கு நிலுவைத் தொகை ஒரு மாதத்திற்குள் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய EMD மற்றும் Security Deposit தொகையான ரூ.12,60,025/—ஐ வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஒசூர் மாநகராட்சி மாநகர நல அலுவலர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்தவாறு, ஒப்பந்தப் பணிக்கான மீதமுள்ள தொகை மற்றும் EMD மற்றும் Security Deposit விதிமுறைகளுக்கு

உட்பட்டு ஒரு மாதத்திற்குள் மனுதாரருக்கு வழங்கிட ஓசூர் மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது.

2026 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 15–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

(ஒப்பம்)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. P. S. சிவகுரு,
M/s Ourland Engineering Works Private Limited,
கதவு எண்25, அடன்டிரா டவர்ஸ்,
திருமலை ரோடு,
தியாகராய நகர்,
சென்னை–600 017,

2) ஆணையர்,
ஓசூர் மாநகராட்சி,
ஓசூர்–635 103.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 600 028.

நகல்:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி / அனுப்பப்படுகிறது//

செயலாளர்.